தட்டும் ஒலி) இந்த அவைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஆம், 110 விதியின்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள், நூறாவது அறிக்கையை இன்றைக்கு அளித்து, சதம் அடித்திருக்கிறார்கள். இந்த அட்ஷய திருதியை நாளில், வளரும் நன்னாளில், நூறாவது அறிவிப்பினை உழைப்பாளர் நலம்பெறும் அறிவிப்பாகத் தந்துள்ளார்கள். தேய்தல், வளர்தல், சந்திரனின் பழக்கமெனில் தேயாப் புகழ் கொண்டு வளர்தலால், அம்மா அவர்களே, நீங்கள் ஒரு அதிசயமன்றோ. இன்றைக்கு நூறாவது அறிவிப்பினைத் தந்துள்ளார்கள். மக்களுக்கான அறிவிப்புகள் Hundred and one, Ten Thousand and One, lakh and one என தினந்தோறும் வளரும். மக்களுக்கு வளமை தருகிறத் திட்டங்களை, வளர்ச்சித் தருகிற அறிவிப்புகளை அறிவிப்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் No.1. ஆகத் திகழ்ந்து, தமிழகத்தை இந்தியாவில் No.1 மாநிலமாக்கி, தமிழக மக்கள் மட்டுமல்லாமல், அகில இந்திய மக்களின் மனங்களிலும் won செய்து, வெற்றி கண்டு, இந்திய அரசியல் வானிலே No.1-ஆக நட்சத்திரத் தலைவராக திகழ்வார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகளுக்கு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றிகளோடு, என்னுடைய நன்றியையும் இணைத்துக்கொள்கிறேன். நன்றி.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் அவர்கள்.

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்கு சோதனை வந்த காலத்தில் 69 சதவீத இடஒதுக்கீட்டிற்கு சட்ட பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்த சமூக நீதிகாத்த வீராங்கனை, ஏழை எளிய மக்கள் ஏற்றம்பெற ஏராளமான திட்டங்களை வழங்கிவரும் நடமாடும் காவல் தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி இந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2012-2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவினுடைய 8-வது அறிக்கையைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.